# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>விக்ஷித் பாரத் மரதன் - 2025</u>

இந்திய அரசாங்கத்தின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழான MY Bharat உடன் இணைந்து இந்திய கலாசார சங்கத்தின் ஒத்துழைப்புடன், 2025 செப்டெம்பர் 28 ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட விக்ஷித் பாரத் மரதன் சிறப்புமிக்க காலி முகத்திடலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த மரதன் 150 க்கும் அதிகமான சர்வதேச நகரங்களில் சமநேரத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த நிலையில் சேவை, ஆரோக்கியம், மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் கொண்டாட்டமாக அமைந்தது. அபிவிருத்தியடைந்த இந்தியா ( 2047 இல் அபிவிருத்தியடைந்த இந்தியா) எனப்படும் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களது கொள்கையினை வலியுறுத்தியும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு மற்றும் நல்லெண்ணம் ஆகியவற்றின் ஆழமாக வேரூன்றிய பிணைப்பை சுட்டிக்காட்டும் வகையிலும் கொழும்பின் விக்ஷித் பாரத் மரதன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

2. கொழும்பில் நடைபெற்ற 5 கிலோமீட்டர் மரதனில் இந்திய புலம்பெயர் சமூகத்தினர், இலங்கை பிரஜைகள், மாணவர்கள், கொழும்பு வாழ் மக்கள், மற்றும் இந்தியாவின் நண்பர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர். இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா, மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ சுனில் குமார கமகே, எரிசக்தி அமைச்சர் கௌரவ குமார ஜயக்கொடி, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கௌரவ டாக்டர் அனில் ஜயந்த, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் கௌரவ எரங்க குணசேகர டிஜிட்டல் பொருளாதாரம் பிரதி அமைச்சர் கௌரவ எரங்க வீரரத்ன, பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ் சுகத் திலகரட்ண ஆகியோரால் இம்மரதன் கொடியசைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொழில்துறைத் தலைவர்கள், திரைப்பட துறை நட்சத்திரங்கள் மற்றும் சமூக ஊடக பிரபலங்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டனர். ஒட்டுமொத்தமாக 2000க்கும் மேற்பட்டோர் இம்மரதனில் பங்கேற்றனர்.

3. தேசத்துக்கான சேவைக்கான மரதன் என்ற தொனிப்பொருளிலான 5 கிலோமீட்டர் தூரத்தைக்கொண்ட இம்மரதனில் கொழும்பைச்சேர்ந்த ஆர்வலர்கள் பங்கேற்று ஐக்கியத்துக்கான ஒரு உறுதியான முன்னுதாரணமாக இந்நிகழ்வை மாற்றியுள்ளனர். ஆரோக்கியத்துக்கான ஒரு செயற்பாடாக மட்டுமல்லாமல் இந்நிகழ்வானது உள்ளுணர்வின் சிந்தனைகளை கொண்டாடும் வகையிலும் அமைந்துள்ளது. உயர் ஸ்தானிகர் கௌரவ

சந்தோஷ் ஜா அவர்கள் தனது உரையில், இந்திய புலம்பெயர்ந்தோர் இந்தியாவின் ஸ்வதேசி நெறிமுறைகளுக்கு தம்மை மீண்டும் அர்ப்பணிக்குமாறு அழைப்பு விடுத்தமையானது பிரதமரின் தற்சார்பு, முழுமை மற்றும் சுற்றுச்சூழல் சார் பொறுப்புக்கான அழைப்பை எடுத்துக்காட்டுகிறது என குறிப்பிட்டார்.

4. இந்நிலையில் கிட்டத்தட்ட 1500 பேர் இந்த மரதனில் கலந்துகொண்ட அதேவேளை 300 தன்னார்வலர்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் இந்நிகழ்வை வெற்றிகரமாக் ஒழுங்கமைப்பதற்காக ஒருங்கிணைந்திருந்தனர். இந்த மரதன் மூலம் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிணைப்பு மேலும் வலுவடைந்தது மட்டுமல்லாமல் அபிவிருத்தி, கண்டுபிடிப்பு மற்றும் பரஸ்பர சுபீட்சம் ஆகியவற்றுக்காக இந்தியா-இலங்கையின் பொதுவான அபிலாஷைகளை மீள வலியுறுத்துவதாகவும் அமைந்தது.

விக்ஷித் பாரத் மற்றும் ஆத்ம நிர்பார் பாரத் உறுதிமொழி

5. இந்த 5 கிலோமீட்ட மரதனை அடுத்து 2047 ஆம் ஆண்டில் இந்தியா அபிவிருத்தி அடைந்த நாடாக உருவாக வேண்டும் என்ற பயணத்துக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் இந்திய புலம்பெயர் சமூகத்தினர் விக்ஷித் பாரத் மற்று, ஆத்ம நிர்பார் பாரத் உறுதிமொழி ஏற்றலுக்காக ஒன்றிணைந்திருந்தனர்.

6. அதேபோல விக்ஷித் பாரத் மரதனுக்கு புறம்பாக உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்கள், இந்திய உயர் ஸ்தானிகராலய பணியாளர்கள் சகிதம் தூய்மையானதும் பசுமையானதுமான சூழலுக்கான பொதுவான அர்ப்பணிப்பு மற்றும் ஸ்வச்சதோவ் 2025 இன் செய்தி ஆகியவற்றை வலியுறித்தும் வகையில் காலி முகத்திடலில் தூய்மையாக்கல் திட்டமொன்ற முன்னெடுத்திருந்தனர்.

ஏக் பேட் மா கே நாம் : பசுமைத் திட்டங்களுக்கான ஓர் அர்ப்பணிப்பு

7. இந்த மரதனுக்கு புறம்பாக இந்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் இலங்கை கிரிக்கட் ஜாம்பவான் திரு அரவிந்த டி சில்வா அவர்கள் சகிதம் ஏக் பேட் மா கே நாம் ( அன்னைக்காக ஒரு மரம்) திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பொறுப்புகள் மற்றும் சூழல் ஸ்திரத்தன்மை இடையிலான தொடர்பை சுட்டிக்காட்டும் வகையில் செப்டெம்பர் 26 ஆம் திகதி இந்திய இல்லத்தில் மரங்களை நாட்டியிருந்தார்.. இந்தச் செயலானது, பசுமையான பூமியை உருவாக்குவதற்கான இந்தியா மற்றும் இலங்கையின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டின் வாழும் நினைவூட்டலாக காணப்படுகின்றது.

உலகளாவிய பங்குடைமைகளில் புலம்பெயர் சமூகத்தின் ஈடுபாடு

8. இலங்கையில் உள்ள இந்திய புலம்பெயர் அமைப்புகளின் உற்சாகமான ஆதரவுடன் இந்த விக்ஷித் பாரத் மரதன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. சமூக அமைப்புகள், கலாசார சங்கங்கள், மற்றும் உள்ளூர் விளையாட்டு ஆர்வலர்கள் முழுமையான உற்சாகத்துடன் கொழும்பில் உள்ள இந்திய உயர்

ஸ்தானிகரலாயத்துடனிணைந்து இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். உலகம் ஒரே குடும்பம் என்ற தொனிப்பொருளின் உள்ளுணர்வை இந்நிகழ்வு வலியுறுத்துகின்றது. இந்தியாவுடனான வலுவான நட்புறவின் பிணைப்புகளை வலியுறுத்தும் வகையில் இந்தியாவின் நண்பர்களும் புலம்பெயர் இந்திய சமூகத்தினரும் ஒன்றிணைந்து இந்த மரதனில் பங்கேற்றனர். விக்ஷித் பாரத் மரதனின் போது புலம்பெயர்ந்தோருக்கான இந்திய அரசாங்கத் திட்டங்கள் குறித்த தூதரக உதவி மற்றும் தகவல்களை வழங்குவதற்காக காலி முகத்திடலில் ஒரு புலம்பெயர் தகவல் மையமும் அமைக்கப்பட்டது,

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் உலகளாவிய கொண்டாட்டம்

9. 2025 விக்ஷித் பாரத் மரதன் ஐக்கியம், மீள்தன்மை மற்றும் பொதுவான பொறுப்புகள் ஆகியவற்றின் வலுவான செய்தியினை தாங்கி உலகளாவிய ரீதியில் 150 நகரங்களில் சமநெரத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த்து.

************

**கொழும்பு**
**28 செப்டெம்பர் 2025**